1990 மே 8]

துணை விவசாயக் கிடங்கு

*8256 திரு. அ. பாப்பா சுந்தரம்:
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குளித்தலை ஒன்றியம், நங்கவரம் பகுதியில் துணை விவசாயக் கிடங்கு திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). 1990-91 ஆம் ஆண்டிற்கு புதிதாக 100 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் தோற்றுவிக்கப்படவிருப்பதால் நங்கவரம் பகுதியில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க வாய்ப்பு உள்ளது.

மலட்டாறு

*2641 திரு. சி. கோவிந்தராஜன் :
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மலட்டாற்றில் தண்ணீர் வருவது நின்றுவிட்டபடியால் அதை மராமத்து செய்து பாசனத்திற்காக ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் ஏதும் தற்போது அரசின் வசம் இல்லை.

9-20 மணி.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலட்டாறு சேனல் திருக்கோவிலூர் அணைக் கட்டப்பட்டதிலிருந்து பிரிந்து வரக்கூடிய 5 சேனல்களில் ஒன்று. 20, 22 ஆண்டுகளுக்கு முன்னால் பெண்ணை ஆற்றில் வெள்ளம் வந்த காரணத்தால், அதுவும் இதுவும் கலந்து மண்மேடாக ஆகி, அதனால் நெல்லிக்குப்பம் தொகுதி, பண்ருட்டித் தொகுதி, திருநாவலூர் தொகுதியிலுள்ள கிட்டத்தட்ட 20 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி தடைப்பட்டிருக்கிறது. அதை, மறுபரிசீலனை செய்து மராமத்து செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணையாற்றின் குறுக்கே அணைக் கட்டப்பட்டதிலேயிருந்து, வலதுபுறத்திலே மலட்டாற்றுக் கால் வாய் வருகிறது மலட்டாறு வேறு, மலட்டாற்றுக் கால்வாய் வேறு இந்த மலட்டாற்று கால்வாயினுடைய நீளம் 12.80 கி.மீ. ஆகும். அதற்குப் பிறகு அது மலட்டாறாக மாறுகிறது. பெண்ணையாற் றிலே வெள்ளம் வருகிறபோது, தண்ணீர் அதிகமாக வந்தால் மலட்டாற்றிலே கலக்கிறது. அப்படித்தான் காலகாலமாக வந்ததன் விளைவு அது மண்மேடிட்டிருக்கிறது. ஆகையினால், தங்களுடைய கேள்வியிலே மலட்டாற்றில் மண்ணை எடுத்துப் பாசனத்துக்கு மராமத்து செய்வது என்பது இயலாது. ஏனென்றால், ஆறே மண்மேடாகிவிட்டது. புதிய ஆறு ஒன்றை உருவாக்க வேண்டும். எனவே, மலட்டாற்றுக் கால்வாயில் பாசனத்தைச் செய்ய நட வடிக்கை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். 4,174 ஏக்கர் பாசன வசதி கால்வாயிலே பெறும். ஆற்றிலே வெள்ளம் வந்தால் உண்டு.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடம் அரசூர் பக்கத்தில் ஒரு சின்ன கல்வர்ட் இருக்கக்கூடிய காரணத்தினால் அந்த இடத்திலேதான் மண்மேடிட்டிருக்கிறது. அந்த இடத்தி லேயாவது சில இலட்சங்கள் செலவு செய்து தூர் எடுத்தால் அங்கிருந்து தண்ணீர், மழைக்காலங்களில் தேங்குவதற்கும், அதனால் சதுப்பு ஏற்படுவதற்கும் வசதியாக இருக்கும். அதன் மூலம் குறைந்தபட்சம், கரும்பூர், குறத்தி, திருத்துரையூர், சின்னப்பேட்டை, வருஞ்சிப்பாக்கம் ஆரிப்பாளையம், பூண்டி, கட்டமுத்துபாளையம், உரையூர் இப்படி 12 பஞ்சாயத்துக் கிராமங்களைச் சேர்த்து 10 ஆயிரம் ஏக்கர்களுக்கு பாசன வசதி ஏற்படும். நீண்ட நாட்களாகவே இது விவசாயிகளுடைய கோரிக்கையாக இருக்கிறது. கடந்த அரசின் காலத்தில் கூட நான் இதைக் கேட்டு ஏமாற்றப்பட்டிருக்கிறேன். நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அண்மையில் கடலூரிலே நடை பெற்ற பொதுப்பணித் துறை மாநாட்டிலே ஒரு வாக்குறுதியை கொடுத்திருக்கிறார். அதை நிறைவேற்றக் கூடிய முறையிலே அதற்கான நடவடிக்கையை துரிதமாக எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சி. கோவிந்தராஜன் அவர்களுடைய மிகப் பெரிய பிரச்சினைகளில் இது ஒன்று. ஆறு முழுவதும் மணல் அகற்ற முடியாது. அவர் குறிப்பிட்ட இடத்திலிருந்து மணல் எடுக்கலாமென்று சொல்லியிருக்கிறார். அது குறித்து என்னுடைய இலாக்கா ஆய்வு நடத்தும். அது சாத்தியக்கூறு என்றால் நிச்ச மாகச் செய்யும்.